# THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

## MCOP.No.107/2017

Deposition of RW3 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OS Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 29.09.2023.

Evidence Recorded Time: 1.16 P.M to 01.30 P.M

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | கிருஷ்ணமூர்த்தி | **Caste** | : | |
| **S/o & W/o.** | : | மாரப்பகவுண்டர் | **Calling** | : | காவல் ஆய்வாளர், பவானி காவல் வட்டம், ஈரோடு மாவட்டம். |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**<u>முதல் விசாரணை:-</u>**

நான் தற்போது பவானி காவல் வட்டத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததன் பேரில் சாட்சியம் அளிக்க அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களுடன் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளேன். கடந்த 2017-ம் வருடம் மார்ச் மாதம் 23ம் தேதி பகல் 15.30 மணிக்கு தலைமைக் காவலர் 2325 கிருஷ்ணன் என்பவர் பவானி காவல் நிலையத்தில் பொறுப்பில் இருந்த போது வீரக்கல் புதுாரை சேர்ந்த கிருஷ்ணன் மகன் கோவிந்தராஜ் என்பவர் கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று பவானி காவல் நிலைய குற்ற எண்.169/2017 சட்டபிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அசலினை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்து நகல் ஒன்றினை புலன் விசாரணைக்காக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.ராஜன் அவர்கள் பார்வைக்கு வைத்ததன் பேரில் அவர் இவ்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அன்று மாலை 16.30 மணிக்கு சம்பவ இடமான மேட்டூர் to பவானி மெயின் ரோட்டில் உள்ள குட்டமுனியப்பன் கோவில் அன்னை வித்யாலயா பள்ளி அருகில் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் வடிவேல், மகேந்திரன் ஆகியோர்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம தயார் செய்துள்ளார். பின்பு சம்பவ இட சாட்சிகள் கோவிந்தராஜ், ராமசாமி, பாலகிருஷ்ணன்,

வடிவேல், மகேந்திரன் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். பின்பு கோவை கே.எம்.சி.ஹெச். தனியார் மருத்துவமனை சென்று அங்கு உள்நோயளிகளாக சிகிச்சை பெற்று வந்த சாட்சிகள் மாதேசன், அன்னக்கொடி, ரேவதி ஆகியோர்களை விசாரணை செய்து வாக்குமூலங்கள் பதிவு செய்துள்ளார். 24.03.2017–ம் தேதி விபத்தில் சம்மந்தப்பட்ட TN 52 U 7797 என்ற பதிவெண் கொண்ட கார் மற்றும் TN 27 Z 7787 என்ற பதிவெண் கொண்ட லாரி ஆகியவற்றை மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பிவைத்துள்ளார். 26.03.2017–ம் தேதி பகல் 13 மணிக்கு நிலையம் ஆஜரான வழக்கின் எதிரி ஜெயக்குமார், த/பெ.மாரியப்பன் என்பவரை கைது செய்தும் தக்க பிணையத்தில் விடுவித்துள்ளார். 31.05.2017–ம் தேதி மோட்டார் வாகன ஆய்வாளர் ஈஸ்வரமூர்த்தி அவர்களை விசாரணை செய்து இரண்டு மோட்டார் வாகன ஆய்வறிக்கைகளை பெற்றுள்ளார். சாட்சிகள் மாதேசன், அன்னக்கொடி, ரேவதி ஆகியோர்களுக்கு காயச் சான்று வழங்கிய மருத்துவர் கேசவ மூர்த்தி அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த தலைமைக் காவலர் 2325 கிருஷ்ணன் அவர்களை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அவரது விசாரணையில் மாதேசன் என்பவருக்கு அடிவயிற்றில் ஏற்பட்ட காயமும், அன்னக்கொடி என்பவருக்கு வலது முகம், வலது முட்டி, இடது முட்டி மற்றும் ரேவதி என்பவருக்கு வலது கால் பாதம் ஆகிய இடங்களில் ஏற்பட்ட காயங்கள் கொடுங் காயங்கள் என்று விசாரணையில் தெரியவந்ததால் வழக்கின் சட்டப்பிரிவினை 279, 338 இதசவாக மாற்றம் செய்து 31.05.2017–ம் தேதி எதிரி ஜெயக்குமார் மீது பவானி குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் குற்ற அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. மேற்கண்ட நீதிமன்றத்தில் வழக்கானது STC.2595/2017 ஆக கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு கடந்த 09.09.2017–ம் தேதி அபராதம் ரூ.2000/– விதிக்கப்பட்டு எதிரி அபராதத் தொகையினை செலுத்தியுள்ளார். அதற்குண்டான ஆவணங்கள் அனைத்தையும் நீதிமன்றத்தில் இன்று சமர்ப்பித்துள்ளேன், **மேற்படி ஆவணங்கள் சா.சா.ஆ.1 முதல் சா.சா.ஆ.5 ஆகும்.**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து பற்றி எனக்கு தெரியாது என்றால் நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். குற்றத்தை ஒப்புக்கொண்டுதான் அபராதம் செலுத்தியுள்ளார்

என்றால் சரிதான். வழக்கினை பொறுத்த வரை சரியாக புலனாய்வு செய்யவில்லை என்றால் சரியல்ல.

<u>5 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

விபத்து சம்மந்தமாக புலன் விசாரணை செய்த கே.ராஜன் என்பவரை விசாரணை செய்தால்தான் வழக்கின் உண்மை விவரம் தெரிய வரும் என்றால் அவரை விசாரித்தால் தான் தெரியவரும். ஆனால் ராஜன் புலன் விசாரணையை தெளிவாக வழக்கு கோப்பில் குறிப்பிட்டுள்ளார், வழக்கு கோப்பினை பார்வையிட்டாலே அவரது விசாரணையை தெளிவாக தெரியவரும். முதல் தகவல் அறிக்கை கொடுத்தது யார் என்றால் வழக்கு கோப்பை பார்வையிட்டதில் கிருஷ்ணன் மகன் கோவிந்தராஜ் என்பவர் புகார் கொடுத்துள்ளார். அவர் யார் என்றால் சம்பவத்தை நேரில் பார்த்த லாரி ஓட்டுநர் ஆவார். 23.03.2017–ம் தேதியில் அதிகாலை செங்கல் இறக்குவதற்காக திருப்பூருக்கு செல்லும் போது அதிகாலை 3.30 மணிக்கு விபத்து நடைபெற்றது என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் லாரியின் ஓட்டுநர் நிலையம் ஆஜராகி புகார் கொடுத்ததாக காணப்படுகிறது என்றால் சரிதான். இந்த விபத்து சம்மந்தமாக காவல் நிலையத்தில் இருந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு விசாரணை செய்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

ஒம்/–RW3,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.